# சங்க இலக்கியங்களில் சொற்பொருள் மாற்றம்

# Sanga Ilakkiyangalil Sorporul Maatram

*சு. காயத்ரி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
பி.கே.ஆர் மகளிர் கலைக் கல்லூரி, கோபி

**S. Gayathri**
*Assistant Professor, Department of Tamil*
*P.K.R. Arts College For Women*
*Gobichettipalayam*

**ஆய்வுச் சுருக்கம்**

*"கல் தோன்றி மண் தோன்றா காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்த குடி" - என்ற புறப்பொருள் வெண்பாமாலையின் வரிகளிலிருந்தே உலகின்முத்த மொழிநம்தமிழ்மொழிஎன்பதை நம்மால் அறிய முடிகிறது. அத்தகைய தமிழ் மொழியின் மிகச் சிறந்த இலக்கியம் எது என்றால் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும். சங்க இலக்கியங்களில் 2381 பாடல்கள் காணப்படுகின்றன. இத்தகைய பாடல்களில் வெளியாகின்ற ஒவ்வொரு சொற்களையும் ஆராயும் பொழுது ஒவ்வொரு கால கட்டத்திலும், இடத்திற்கு ஏற்பவும் பண்பாட்டிற்கு ஏற்பவும் மக்களுக்கு ஏற்பவும் சொற்களின் பொருள் மாற்றம் அடைந்து வந்துள்ளது என்பதை அறிய முடிகிறது. தமிழ்மொழியில் லட்சக்கணக்கான சொற்கள் காணப்படுகின்றன. அச்சொற்கள் அனைத்தும் ஒவ்வொரு காலகட்டத்திலும் ஒரே பொருளில்தான் பயன்படும் என்று நம்மால் கூற இயலாது. வளரும் நாகரிகத் திற்கு ஏற்பவும் கால சூழ் நிலைகளுக்கு ஏற்பவும் மாற்றம் அடைவது இயல்பே. "சொற்கள் இடம் காலம் என்ற இரு நிலைகளில் பொருள் மாற்றம் பெறுகின்றன சொற்கள் இடம் தோறும் வேறுபடல் மிகக் குறைந்த வழக்கு என்றும் காலந்தோறும் வேறுபடல் பெருவழக்கு என்றும் அறிஞர்*

**Abstract**

*We can know that our Tamil language is the oldest language in the world from the lines of the extrinsic Venpamalai, "The elder who appeared with the sword before the time when stone appeared and soil appeared". The best literature of such a Tamil language is the Sangam literature of eights and tens. 2381 songs are found in Sangam literature. An examination of every word that appears in such songs reveals that the meaning of the words has changed in each period, according to place, culture and people. There are millions of words in Tamil. We cannot say that words are all used in the same sense in every period. It is natural to adapt to developing civilizations and to adapt to time and environment. Scholar R.Srinivasan notes that words have different meanings in terms of place and time. As such it is natural for the meanings of each word to change meaning according to the respective period. This article is intended to explore this.*

*ரா சீனிவாசன் அவர்கள் குறிப்பிடுகின்றார். அதுபோல ஒவ்வொரு சொற்களுக்குரிய பொருள்களும் அந்தந்த கால கட்டத்திற்கு ஏற்ப பொருள்மாற்றம் அடைவது இயல்பான ஒன்று. இதனை ஆராய்யும் பொருட்டே இக்கட்டுரை அமைந்துள்ளது.*

***முக்கியச் சொற்கள்:***

*சங்க இலக்கியம், சொற்பொருள், சிலம்பு, பரிபாடல், குறுந்தொகை, நாற்றம், பலி*

***Keywords:***

*Tamil Language, Sangam Literature, Tamil Culture, Pathupattu, Ettuthogai*

**Citation**

Gayathri, S. “Sanga Ilakkiyangalil Sorporul Maatram.” *Journal of Tamil Culture and Literature*, vol. 1, no. 3, 2022, pp. 12–17.

*https://doi.org/10.5281/zenodo.20137762*

**சிலம்பு**

*சிலம்பு என்பது பெண்கள் காலில் அணியும் ஒருவகை அணிகலன். தற்காலத்தில் சிலம்பு என்பதை இருவகைகளில் வகைப்படுத்துவர் ஒன்று காலில் அணியும் நகை மற்றொன்று தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டில் ஒன்றான சிலம்பம் எனவே மக்களால் அறிந்திருக்கக் கூடிய பொருள் இவ்விரண்டு வகை இவை மட்டும் அல்லாமல் சங்க இலக்கியங்களில் சிலம்பு என்பதற்கு பல பொருள்கள் கையாளப்பட்டுள்ளது.*

*உதாரணமாக புறநானூற்றில் பேகன் தன் மனைவியிடமிருந்து பிரிந்து பரத்தை ஒருத்தியோடு வாழ்வதை கேள்வியுற்ற கபிலர் மனைவியின் துயரத்தையும் அவளுக்கு பேகன் அருள் செய்ய வேண்டும் என்றும் ஒரு பாணன் கூறுவது போல ஒரு பாடலை இயற்றியுள்ளார். இப்பாடலில் சிலம்பு என்ற சொல் பயின்று வந்துள்ளது.*

***“நளிஇருஞ் சிலம்பின் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்றி”*** *புறநானூறு 143*

*“கபிலர் பேகனிடம் வேண்டுகிறார். நேற்று அருவி ஒலி கேட்கும் உன் சிற்றூருக்கு சென்றேன். காடுமெடெல்லாம் நடந்து என் சுற்றத்தின் பசியைப் போக்கிக்கொள்ள உன் வீட்டு வாயிலில் நின்று உன்னையும் உன் மலையையும் வாழ்த்திக் கொண்டு நின்று பாடினேன். அப்போது தன் துன்பத்தோடு வடிக்கும் கண்ணீரை நிறுத்த முடியாமல் தன் மார்பகங்கள் விம்மிக் கண்ணீரால் நனையுமாறு புல்லாங்குழல் வருந்துவது போல உன் மனைவி வந்த அழுதாள் இதனைக் கருத்தில் கொண்டு நீ மீண்டு வர வேண்டும்சுசு என்னும் வகையில் பாடலானது அமைகிறது.*

*இதில், உன் ஊரையும் உன் மலையையும் வாழ்த்தினோம் என்ற வரிகளிலிருந்து சிலம்பு என்ற சொல்லிற்கான பொருள் “மலை” என நம்மால் அறிய முடிகிறது.*
*மேலும்,*

*பரிபாடலில் திருமாலின் சிறப்புகளைக் கூறும் பாடலில் சிலம்பு என்ற சொல் பயின்று வந்துள்ளது. அதாவது திருமால் கோயில் கொண்டுள்ள பகுதிகளே அழகுற அமையும் பகுதி என்னுமாறு அமைந்த பாடலில்,*

***“சிலம்பிற் சிலம்பிசை ஓவாது”*** ***பரிபாடல் 15 (44)***

*என்ற வரிகளில் “பகைவரைப் போரிட்டழித்து வெற்றி கொண்டோனாகிய திருமாலின் நிறமிக்க குன்றல்லவா! அதனால் அக்குன்றத்தில் எழுகின்ற ஒலிகளும் அவற்றுக்கு எதிராக எழும் இசைபோன்ற எதிரொலிகளும் எப்போதும் ஓய்வின்றி எழுந்துகொண்டேயிருக்கும் பகுதியே” என்னும் பாடலின் மூலம் சிலம்பு என்பதற்கு “குன்று” என்ற பொருளினை நம்மால் இங்கு காண முடிகிறது.*

*இவ்வாறு சங்க இலக்கியங்களில் காணப்படும் சொற்கள் ஒவ்வொரு நிலைகளிலும் அதன் பொருளானது மாற்றம் பெற்றுள்ளது என்பதையும் தற்காலத்தில் இது போன்ற சொற்கள் வழக்கிலிருந்து மறைந்து கொண்டு வருகிறது என்பதையும் உணர முடியும்.*

**கண்டது**

*கண்டது என்ற சொல் “பார்த்தல்” அல்லது காணப்பட்ட பொருளைக் குறிக்கும். தற்காலத்தில் பேச்சு வழக்கில் இச்சொல் அதிகம் காணப்படுகின்றன.*

*எனவே கண்டது என்பது பார்ப்பது. இதனைச் சங்க இலக்கியங்களின் வாயிலாக ஆராயும் பொழுது கண்டது என்பது அறிதல் என்னும் பொருளில் அமைந்துள்ளமையை காணலாம்.*

*குறுந்தொகையில், இயற்கைப் புணர்ச்சியில் தலைவன், தலைவியின் கூந்தல் இயற்கை மணம் உடையது என்பதை கூறி நலம் பாராட்டுவதாக பாடல் காணப்படுகின்றன. அதில் ''வண்டை வினாவுதல் வாயிலாக புந்தாதுகளை ஆராய்ந்து தேன் உண்ணுகின்ற வாழ்க்கையினையும் உள்ளிடத்தே சிறையினையும் உடைய வண்டே என்னிடத்தில் அன்பு பாராட்டி நான் விரும்பியதைக் கூறாமல் நீ கண்கூடாக அறிந்தவற்றை சொல்வாயாக நீ அறியும் மலர்களில் எழுமையும் என்னோடு பயிலுதல் பொருந்திய நட்பையும் மயில் போன்ற மென்மையும் நெருங்கிய பற்களையும் உடைய தலைவியின் கூந்தலை போல நறுமணமுடைய புக்களும் உள்ளனவோ? என்பது பாடல்.*

***''கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி***
***காமம் செப்பாது கண்டது மொழிமோ'' குறுந்தொகை 02***

*இப்பாடலின் இறுதியில் நீ அறிந்த மலர்களிலே நறுமணம் உடைய மலர்களும் உள்ளனவா? என்ற வரிகளிலிருந்து ''கண்டது'' என்ற சொல்லானது பார்த்தல் என்ற பொருள் அல்லாமல் அறிதல் என்ற பொருளில் வந்துள்ளமையை நம்மால் அறிய முடிகிறது.*

*அதாவது மனம் என்பதை நுகர்ச்சியால் மட்டுமே அறிய முடியும். கண்களால் அறிந்து கூற முடியாது. ஆனால் இப்பாடலில் நறுமணத்தை கூறுக என்பது கண்டது மொழிமோ என்று குறிப்பிடுகிறது நறுமணத்தை கண்களால் கண்டு கூற முடியாத நிலையில் இப்பாடல் கண்டது மொழிமோ என்று கூறி இருப்பதற்கு காரணம் இவ்விடத்தில் பார்த்தல் என்ற பொருளில் பயன்படுத்தவில்லை என்பதை அறிய முடிகிறது. எனவே நறுமணத்தை பார்க்க முடியாத காரணங்களால் இங்கு அறிந்தது என்ற பொருளில் அமைந்திருப்பது தெளிவாகிறது மேலும் கண்டது என்பது இங்கு கண்களால் கண்டது என்ற பொருளை விடுத்து நீ அறிந்தவற்றுள் என்ற பொருளில் வந்துள்ளது தெளிவாகிறது.*

*எனவே இப்பாடலின் மூலம் கண்டது என்ற சொல்லிற்கு சங்க இலக்கியத்தில் அறிதல் பொருளில் இருந்து வந்துள்ளமையை நன்கு அறியலாம். தற்காலத்தில் அறிந்து என்ற சொல்லிற்கு மட்டும்தான் இப்பொருள் காணப்படுகின்றன. கண்டது என்பதற்கு பார்த்தல் என்ற பொருளே பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.*

**நாற்றம்**

*நாற்றம் என்ற சொல் தற்காலத்தில் துர்நாற்றத்தைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்படுகிறது. சங்க இலக்கியங்களில் நாற்றம் என்ற சொல் நறுமணத்தைக் குறிக்கும் சொல்லாக பயன்படுத்தப்பட்டுள்ளது.*

***''நாற்றம் இல்லாத மலரின் அழகு இன்னா''. இன்னா நாற்பது 7***

*என்ற இன்னா நாற்பதின் வரிகள் நாற்றம் என்ற சொல்லானது நறுமணம் என்ற பொருளிலே பயின்று வந்துள்ளது.*

*வலியில்லாதவன் கையிற்பிடித்த ஆயுதம் துன்பமாகும். மணமில்லாத மலரின் அழகு துன்பமாகும். தெளிவு இல்லாதவன் செய்யும் வேலை துன்பமாகும். அவ்வாறே சொற்களின் நுட்பத்தை அறியாதவனது சொல்லும் துன்பமாகும் என்று பாடல் அமைந்துள்ளது.*

*மணமில்லாத மலரின் அழகு துன்பமாகும் என்ற வரிகளிலிருந்து நாற்றம் என்பது மனம் என்ற பொருளில் வந்துள்ளமை நம்மால் அறிய முடிகிறது. மேலும்,*

***"முகைமொக்குள் உள்ளது நாற்றம் போல் பேதை***
***நகைமொக்குள் உள்ளதொன் றுண்டு" திருக்குறள் 1274***

*என்ற திருக்குறளின் வரிகளிலும் நாற்றம் என்ற சொல்லிற்கு நறுமணம் என்ற பொருள் வெளிப்படுகிறது. அதாவது மலராத அரும்புக்குள் நறுமணம் அடங்கியிருப்பது போலத்தான் ஒரு பெண்ணின் புன்னகை என்ற அறும்புக்குள் காதலனைப் பற்றி நினைவும் நிரம்பியிருக்கிறது என்று வள்ளுவர் கூறியுள்ளார்.*

*எனவே கால மாற்றத்தின் அடிப்படையில் நாற்றம் என்ற சொல்லானது நறுமணம் என்ற பொருளிலிருந்து திரிந்து துர்நாற்றம் (கெட்டவாசனை-பேச்சுவழக்கு) என்ற பொருளில் மாறி வந்துள்ளது என்பதை அறியலாம்.*

**பலி**

*பலி என்ற சொல்லிற்கு பிராணிகளை பலியிடுதல் அல்லது விபத்து நோய் முதலியவற்றில் பலியாகும் உயிர் என்றே தற்காலத்தில் பொருள் கொள்கின்றனர். ஆனால் சங்க இலக்கியத்தில் பலி என்ற சொல்லிற்கு காக்கை முதலிய பறவைகள் இடும் சோறு எனவும் பூஜையில் அர்ச்சிக்கும் பூ எனவும் பல பொருள்கள் காணப்படுகின்றன.*

***"விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே" குறுந்தொகை 210***

*என்ற குறுந்தொகைப் பாடலில் பொருள்வயிற் பிரிந்த தலைவன் வரும்வரை தலைவியை ஆற்றுவிப்பது தோழி. தலைவனை நினைத்து தோல்வளம் நெகிழ்ந்தது தலைவிக்கு. அத்துன்பத்தை போக்கும் வகையில் விருந்தினர் வருவதாக காக்கை கரைகிறது (தலைவன் வருகிறார் போல). தோழி அந்த காக்கைக்கு 'சுநள்ளி வள்ளல் கானத்திலேயும் பல பசுக்கள் கறந்த பாலில் எடுக்கப்பட்ட நெய்யில் தொண்டி ஊர் பகுதியில் விளைந்த நெல் அரிசியில் சமைத்த சோற்றில் கலந்து உண்ண கொடுத்தாலும் அது சிறிய கைமாறு தான்சுசு என பாடல் அமைந்துள்ளது. இங்கு காக்கைக்கு விருந்தளிக்கும் பொருட்டு பலி என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது.*

*மேலும்*

***"தேம்பலிச் செய்த ஈர்நறுங் கையாள்" ஐங்குறுநூறு 259***

*என்ற ஐங்குறுநூறு பாடலில் தலைவன் தலைவியைப் பற்றி நினைக்கிறாள். இவள் குன்ற குறவனின் அன்பு மகள் மன்றத்தில் புத்த வேங்கை மலர்கள் சிலவற்றைக் கொண்டு மலையில் வாழும் தன் குல தெய்வமான முருகனை புசனை செய்து முருகனை வாழ்த்துகின்றார். தேனோடு கூடிய மலரைப் போட்டாள். அவளது ஈரமான கையில் காந்தள் மலரும் மணக்கிறது என்பது போன்ற வரிகளில் இப்பாடலானது அமைந்துள்ளது இதில் பலி என்ற சொல்லிற்கு இறைவனுக்கு அர்ச்சனை செய்யும் பு என்ற பொருளில் அமைந்துள்ளதைக் காணலாம். இங்கு முருகனுக்கு படைக்கும் புவினையே 'சுபலிசுசு என்று குறிப்பிட்டுள்ளன.*

*எனவே சங்க கால இலக்கியங்களில் காணப்படும் பலி என்ற சொல்லிற்கு காக்கைக்கு படைக்கும் உணவு மற்றும் புசை பொருளாக வழங்கப்படும் பு ஆகியவையே என்று நம்மால் அறிய முடிகிறது.*

**முடிவுரை**

*ஒரு சொல்லின் பொருளில் ஏற்படும் மாற்றமே சொற்பொருள் மாற்றம் என்கிறோம். அவ்வகையில் சங்க இலக்கியத்தில் பயன்பட்ட ஒருசில சொற்களை ஆராயும் போது அச்சொல்லின் பொருளில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அறிய முடிந்தது. மேலும் அச்சொல்லிற்குரிய பொருள் தற்காலத்தில் எத்தகைய தன்மையில் வழங்கப்படுகிறது என்பதையும் அறிய முடிந்தது. ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் பல முறைகளில் பொருள் குறித்து விளங்குகிறது. காலப்போக்கில் இத்தகைய சொற்கள் புதிதாக சேர்க்கவோ நீக்கவோ அல்லது மாற்றவோ முடியும். அவ்வகையில் பல சொற்களுக்கு பொருள் வேறுபட்டு தற்காலத்தில் பயன்பட்டு வருகின்றன. சங்க காலத்தில் பொருள் வேறுபாடுகளை அறிய முடிந்தது. மேலும் இதனை மையமாகக் கொண்டு தொழில்முறை அடிப்படையில், சமுதாயத்தின் அடிப்படையில், பண்பாடு சார்ந்த அடிப்படையில், காலத்தின் அடிப்படையில், இலக்கியத்தின் அடிப்படையில் பல கோணங்களில் சொல்லுக்குரிய பொருள் மாற்றங்களை ஆராயலாம்.*

**துணைநூற்பட்டியல்**


1. *சங்க இலக்கிய ஆய்வுகள் - சண்முகதாஸ் அருணாசலம், தேசிய கலை இலக்கிய பேரவை -2002.*
2. *புறநானூறு தெளிவுரை - புலியுர்கேசிகன் உரை, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், முதல்பதிப்பு-2010.*
3. *குறுந்தொகை தெளிவுரை - புலியுர்கேசிகன் உரை, ஸ்ரீசெண்பகா பதிப்பகம், முதல்பதிப்பு-2010.*
4. *பரிபாடல் - பொ.வே.சோமசுந்தரனார் உரை, கழக வெளியீடு.*


## References


1. *Shanmugadas Arunachalam, Sangam Ilakiya Ayivugal, National Art Literary Council – 2002.*
2. *Purananuru Thelivurai - Polyurethane Urai, Srisenpaka Pathipagam, First Edition-2010.*
3. *Kurunthogai Thelivurai - Polyurethane Urai, Sreesanth Pathipagam, First Edition-2010.*
4. *Paripadal - P.V. Somasundaranar Urai, Kazhga Veliyeedu.*